முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2019 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2019-07-20
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச்சட்டகம், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் மேற்கொள்ளப்படும் அடிப்படையாக அமைந்த எடுகோளினை இனங்காண்கின்றது. அத்துடன், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் மூலகங்களின் பொருள் வரையறை, ஏற்பிசைவு மற்றும் அளவீடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கோட்பாட்டு வேலைச் சட்டகத்திற்கு அமைவாக, நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் அடிப்படையாக அமைந்த எடுகோளினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பரிப்பொன்றின் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனையைக் (criteria) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

ஒன்றித்த அறிக்கையிடலானது பல்வேறு வகையான மூலதனம் எவ்வாறு நிறுவனத்தின் பெறுமதி அதிகரிப்புச் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்றது என விபரிக்கின்றது. அத்துடன் ஒன்றித்த அறிக்கை, அடிப்படையில் ஒன்றுடனொன்று பிணைக்கப்பட்ட எட்டுப் பிரதான கூறுகளை உள்ளடக்குகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஒன்றித்த அறிக்கையிடலின் ஐந்து (05) பிரதான கூறுகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

(a) சொத்தொன்று அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படுவதற்கு நிறைவு செய்யப்பட வேண்டிய ஒரு (01) தேர்வு நிபந்தனையைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட EPL கம்பனியானது** 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது புதிய பொருளொன்றை அபிவிருத்தி செய்ததுடன், அதன் வர்த்தக ரீதியான தொழிற்பாட்டினை 2019 மே மாதத்தில் ஆரம்பித்தது. 2018/19 ஆண்டில் இந்தப் புதிய பொருள் தொடர்பாக இறுக்கப்பட்ட கிரயங்கள் கீழ்வருமாறு:

(1) ஆண்டின்போது புதிய பொருள் தொடர்பான ஆராய்ச்சிக்காக இறுக்கப்பட்ட செலவு ரூபா 1 மில்லியன்.

(2) கம்பனி புதிய பொருளுக்கான ஆக்கவுரிமையை ஆண்டின்போது பதிவு செய்துள்ளதுடன் அதற்கான பதிவுக் கட்டணம் ரூபா 100,000/-.

(3) இந்தப் புதிய பொருளின் விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 300,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது:**
LKAS 38 – அருவச் சொத்துக்கள் நியமத்திற்கு அமைவாக மேலே தரப்பட்டுள்ள செலவுகள் ஒவ்வொன்றினையும் அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்ய முடியுமா என **விபரிக்குக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **வரையறுக்கப்பட்ட லங்கா ரீஸ் (தனி) கம்பனியின்** நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| **31 மார்ச்** | **2019** | **2018** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | 2,000,000 | 1,800,000 |
| திரள் தேய்மானம் | (1,400,000) | (1,500,000) |
| அருவச் சொத்துக்கள் | 35,000 | - |
| ஏனைய கம்பனிகளில் முதலீடு (கிரயத்தில்) | 165,000 | - |
| | **800,000** | **300,000** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 65,000 | 90,000 |
| வியாபார வருமதிகள் | 17,000 | 21,000 |
| | **82,000** | **111,000** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **882,000** | **411,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 500,000/-.

(2) 2019 மார்ச் 31 இல் மோட்டார் வாகனமொன்று காசுக்கு விற்கப்பட்டது. அந்த வாகனத்தின் கிரயம் மற்றும் 2019 மார்ச் 31 இல் அதன் திரள் தேய்மானம் முறையே ரூபா 1,200,000/- மற்றும் ரூபா 600,000/- ஆகும். இந்த மோட்டார் வாகனத்தின் விற்பனை மீதான இலாபம் ரூபா 200,000/-.

(3) 2019 மார்ச் 31 இல் கம்பனி புதிய மோட்டார் வாகனமொன்றினைக் கொள்வனவு செய்தது.

(4) அருவச் சொத்துக்கள் 2019 மார்ச் 31 இல் கொள்வனவு செய்த ஆக்கவுரிமையைப் பிரதிபலிக் கின்றது.

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியது:**
2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **வரையறுக்கப்பட்ட லங்கா ரீஸ் (தனி) கம்பனியின்** முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட சப்கோ கம்பனியின்** 2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

**முற்றடக்க வருமானக் கூற்றிலிருந்து பெற்றவை** *(ரூபா '000)*

| **ஆண்டு முடிவு** | **2019 மார்ச் 31** |
|---|---|
| விற்பனை | 220,700 |
| விற்பனைக் கிரயம் | 143,780 |
| மொத்த இலாபம் | 76,920 |
| வட்டி மற்றும் வரிக்கு முன் இலாபம் | 34,760 |
| வரிக்குப் பின் இலாபம் | 16,177 |

**நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து பெற்றவை** *(ரூபா '000)*

| **திகதியில்** | **2019 மார்ச் 31** | **2018 மார்ச் 31** |
|---|---|---|
| தொக்குகள் | 25,250 | 16,400 |
| வியாபார வருமதிகள் | 27,580 | 19,850 |
| உரிமையாண்மை | 125,600 | 118,000 |
| நீண்டகாலக் கடன்கள் | 12,000 | 15,600 |

சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை எனக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக**:

(i) மொத்த இலாப விகிதம்

(ii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(iii) தொக்கு இருப்புக் காலம்

(iv) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE). (06 புள்ளிகள்)

(b) கீழ்வரும் விகிதங்கள் ஒவ்வொன்றையும் மேலும் மேம்படுத்துவதற்குச் சாத்தியமான தலா இரண்டு (02) நடவடிக்கைகளை **நிரற்படுத்துக**:

(i) மொத்த இலாப விகிதம்

(ii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஐரோப்பா குவாலிட்டி புட்ஸ் (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**வரையறுக்கப்பட்ட ஐரோப்பா குவாலிட்டி புட்ஸ் (தனி) கம்பனி**

**நிதிநிலைக் கூற்று** *(ரூபா '000)*

| மார்ச் 31 ஆந் திகதி | 2019 | 2018 |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 22,050 | 22,300 |
| திரள் தேய்மானம் | (10,090) | (10,020) |
| **முன்கொணரற் பெறுமதி** | **11,960** | **12,280** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 5,935 | 3,320 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 10,920 | 11,580 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,205 | 2,560 |
| | **19,060** | **17,460** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **31,020** | **29,740** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்கு மூலதனம் | 10,000 | 10,000 |
| கைக்கொள் இலாபம் | 16,270 | 13,820 |
| | **26,270** | **23,820** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | |
| நீண்டகாலக் கடன்கள் | 1,000 | - |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | 540 | 490 |
| | **1,540** | **490** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 1,040 | 980 |
| குறுங்காலக் கடன்கள் | 1,800 | 3,425 |
| செலுத்தவேண்டிய வட்டி | 220 | 75 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 150 | 950 |
| | **3,210** | **5,430** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **31,020** | **29,740** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் மோட்டார் வாகனமொன்று ரூபா 600,000/- இற்கு விற்கப்பட்டது. அந்த மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூபா 750,000/- உம் விற்பனைத் திகதியில் அதன் முன்கொணரற் பெறுமதி ரூபா 350,000/- உம் ஆகும்.

(2) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வட்டிச் செலவு ரூபா 590,000/- ஆகும்.

(3) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வருமான வரிச் செலவுகள் ரூபா 125,000/- ஆகும்.

(4) ஆண்டின்போது பணிக்கொடைக் கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) ஆண்டின்போது எவ்வித பங்கிலாபங்களும் செலுத்தப்படவோ, வெளிப்படுத்தப்படவோ இல்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**நேரில் முறையைப்** பயன்படுத்தி, 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஐரோப்பா குவாலிட்டி புட்ஸ் (தனி) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

(A) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட X கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

(1)

| உருப்படி | கணக்கீட்டு முன்கொணரற் (பதிவழிப்புப்) பெறுமதி (ரூபா) | வரி அடிப்படை (ரூபா) |
|---|---|---|
| கட்டடம் | 6,000,000 | 5,000,000 |
| வாகனங்கள் | 2,500,000 | 2,000,000 |

(2) 2018 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பு கணக்கின் மீதி எதுவுமில்லை.

(3) 2019 மார்ச் 31 இல் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 700,000/-.

(4) **வரையறுக்கப்பட்ட X கம்பனியின்** வருமான வரி வீதம் 28 %.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2019 மார்ச் 31 இல் தற்காலிக வித்தியாசங்களை (Temporary differences) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை / பரிப்பினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(B) தொக்குகள் தொடர்புபட்ட கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட டெல்டா கம்பனியின்** 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

- 2018 டிசெம்பர் 01 ஆந் திகதி 2,000 அலகு தொக்குகள் இருந்ததுடன் அவற்றின் அலகுக் கிரயம் ரூபா 10/-.
- மாதத்தின்போதான பெறுவனவுகள்:
    - 2018 டிசெம்பர் 15 இல் – 5,000 அலகுகள், அலகொன்று ரூபா 9.30 விலைப்படி
    - 2018 டிசெம்பர் 20 இல் – 6,000 அலகுகள், அலகொன்று ரூபா 11/- விலைப்படி
- மாதத்தின்போதான வழங்கல்கள்:
    - 2018 டிசெம்பர் 16 இல் – 4,000 அலகுகள்
    - 2018 டிசெம்பர் 25 இல் – 7,000 அலகுகள்

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிறையேற்றிய சராசரிக் கிரய (WAC) முறையைப் பயன்படுத்தி 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் இறுதித் தொக்கின் பெறுமதியைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழே தரப்பட்டுள்ள பரீட்சை மீதி 2019 மார்ச் 31 இல் **ஓமேகா PLC** யின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

**ஓமேகா PLC**

**2019 மார்ச் 31 இல் பரீட்சைமீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணி | 50,000 | |
| கட்டடம் | 25,000 | |
| மோட்டார் வாகனம் | 21,000 | |
| அலுவலக உபகரணம் | 7,200 | |
| மூலதனப் புத்துருவாகும் வேலை | 7,600 | |
| **திரள் தேய்மானம் - 2018 ஏப்ரல் 01 இல்:** | | |
| கட்டடம் | | 8,500 |
| மோட்டார் வாகனம் | | 11,500 |
| அலுவலக உபகரணம் | | 2,200 |
| முற்கொடுப்பனவுகள் | 240 | |
| தொக்குகள் - 2019 மார்ச் 31 இல் | 41,500 | |
| குறிப்பிடு மூலதனம் (800 000 சாதாரண பங்குகள்) | | 80,000 |
| கைக்கொள் இலாபம் - 2018 ஏப்ரல் 01 இல் | | 6,450 |
| மீள்மதிப்பு ஒதுக்கம் | | 2,100 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 24,520 | 31,200 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 3,280 | |
| செலுத்திய வருமான வரி | 800 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 4,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 192,300 | 274,500 |
| ஏனைய வருமானம் | | 2,900 |
| வரிமதிப்பாண்டு 2017/18 ற்காகச் செலுத்த வேண்டிய வருமான வரி | | 650 |
| நிருவாகச் செலவுகள் | 32,700 | |
| விநியோகச் செலவுகள் | 13,980 | |
| நிதிச் செலவுகள் | 1,400 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2018 ஏப்ரல் 01 இல் | | 520 |
| வங்கிக் கடன் | | 5,000 |
| | **425,520** | **425,520** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் இருந்த தொக்குகள் ரூபா 3,500,000/- கிரயமுடைய பாதிப்புற்ற தொக்குகள் சிலவற்றை உள்ளடக்கியது. இந்தத் தொக்குகளின் நிகரத் தேறத்தக்க பெறுமதி ரூபா 2,800,000/-. இது தொடர்பில் கணக்கேடுகளில் எந்தச் செம்மையாக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) மீள்மதிப்பு ஒதுக்கம் ரூபா 2,100,000/- முழுவதும் 03 ஆண்டுகளுக்கு முன்னர் காணியின் மீள்மதிப்பீடு தொடர்பில் ஏற்பட்டதாகும். 2019 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடு காணியின் பெறுமதி ரூபா 3,000,000/- இனால் அதிகரித்தமையைக் காட்டுவதுடன் இது தொடர்பில் எந்தச் செம்மையாக்கமும் கணக்கேடுகளில் செய்யப்படவில்லை.

(3) 2018 செப்ரெம்பர் 30 ஆந் திகதி கம்பனி விநியோக வான் ஒன்றினை ரூபா 2,900,000/- இற்கு விற்பனை செய்தது. இந்த வான் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 4,500,000/- இற்குக் கொள்வனவு செய்யப்பட்டதாகும். முழுமையான விற்பனைப் பெறுவனவு தொடர்பிலும் காசேட்டில் வரவுப் பதிவும் ஏனைய வருமானக் கணக்கில் செலவுப் பதிவும் செய்யப்பட்டதைத் தவிர வேறு பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளின் பயன்தரும் ஆயுட்காலங்கள்:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 10 ஆண்டுகள் |

(5) 2018/19 வரிமதிப்பாண்டிற்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூபா 900,000/- ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.

(6) முன்னைய நிதியாண்டில் முழுவதுமாக ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 420,000/- வருமதியான வாடிக்கையாளர் ஒருவர் 2019 மார்ச் 31 இல் வங்குரோத்துநிலை அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 மார்ச் 31 இல் நிலுவையிலுள்ள எஞ்சிய வியாபார வருமதிகளில் 2 % பொதுவான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(7) ஒரு புதிய தொழிற்சாலைக் கட்டடத்தை நிருமாணிப்பதற்காகக் கம்பனி 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆண்டிற்கு 10 % வட்டிக்கு ரூபா 5 மில்லியன் வங்கிக் கடன் பெற்றிருந்தது. 2019 மார்ச் 31 இல் நிருமாணம் தொடர்ந்து இடம்பெற்று வந்ததுடன், நிருமாணம் 2019 டிசெம்பர் 31 இல் பூரணமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிருமாணம் தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் மூலதனப் புத்துருவாகும் வேலையின் கீழ் பதிவு செய்யப்பட்டன. மேலும் ஆண்டின்போது கடன் மீள்கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கடன் மீதான ஆண்டிற்கான வட்டி நிதிச் செலவுகள் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு, வியாபார சென்மதிக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது. 2019 மார்ச் 31 இல் இருந்த வங்கிக் கடனின் ¼ பங்கு அடுத்த ஆண்டில் தீர்க்கப்படுதல் வேண்டும்.

(8) முற்கொடுப்பனவுக் கணக்கானது 2019 நாட்காட்டி ஆண்டிற்கான வாடகைக் கொடுப்பனவு முழுவதையும் உள்ளடக்குகின்றது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபை 2019 ஏப்ரல் 15 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் 2019 மார்ச் 31 இல் இருந்த சாதாரண பங்குகளுக்கு இறுதிப் பங்கிலாபமாக பங்கொன்றிற்கு ரூபா 2/- வீதம் செலுத்தத் தீர்மானித்தது.

(10) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்கு 2019 யூன் 02 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

மேலுள்ள தகவல்களைக் கருத்திற்கொண்டு,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பிரசுரிப்புக்கு ஏற்ற வடிவில் **ஒமேகா PLC** தொடர்பில் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(c) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி **சிக்மா PLC** ஆனது **பீட்டா PLC** யின் 75 % மான சாதாரண பங்குகளை (மொத்தப் பங்குகள் 1,000,000) ரூபா 290 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. கொள்வனவுத் திகதியில் **பீட்டா PLC** யின் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு ரூபா 340 மில்லியன் ஆகும். 2018 ஏப்ரல் 01 இல் **பீட்டா PLC** பங்கொன்றின் சந்தைப் பெறுமதி ரூபா 365/-.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சிக்மா PLC** மற்றும் **பீட்டா PLC** ஆகிய கம்பனிகளின் முற்றடக்க வருமானக் கூற்று கீழ்வருமாறு:

**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூபா '000)*

| | சிக்மா PLC | பீட்டா PLC |
|---|---|---|
| விற்பனை | 250,000 | 150,000 |
| விற்பனைக் கிரயம் | (150,000) | (90,000) |
| **மொத்த இலாபம்** | **100,000** | **60,000** |
| | | |
| **ஏனைய வருமானம்:** | | |
| வட்டி வருமானம் | 1,200 | 950 |
| பங்கிலாப வருமானம் | 500 | - |
| ஏனைய வருமானம் | 150 | 1,250 |
| | **101,850** | **62,200** |
| **செலவுகள்:** | | |
| விநியோகச் செலவுகள் | (12,000) | (7,000) |
| நிருவாகச் செலவுகள் | (60,000) | (46,000) |
| நிதிச் செலவுகள் | (6,000) | (4,000) |
| **வரிக்கு முன் இலாபம்** | **23,850** | **5,200** |
| வருமான வரிச் செலவுகள் | (6,500) | (1,550) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **17,350** | **3,650** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | - | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **17,350** | **3,650** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டின்போது **சிக்மா PLC** ரூபா 5,000,000/- பெறுமதியான பொருட்களை **பீட்டா PLC** க்கு கிரயத்தில் 10 % இலாப எல்லை வைத்து விற்பனை செய்தது. 2019 மார்ச் 31 இல் **பீட்டா PLC** யின் இறுதித் தொக்குகள், **சிக்மா PLC** யிடமிருந்து கொள்வனவு செய்த ரூபா 1,100,000/- பெறுமதியான பொருட்களை உள்ளடக்குகிறது.

(2) இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், **பீட்டா PLC** ஆனது **சிக்மா PLC** வழங்கிய தனிச்சங்கள் மீது ரூபா 5,000,000/- இனை முதலீடு செய்தது. இவை 05 ஆண்டுகளில் முதிர்வடைவதுடன் வருடாந்த வட்டி வீதம் 10 % ஆகும். **பீட்டா PLC** யின் வட்டி வருமானம் ஆனது இந்த ஆண்டில் தனிச்சங்கள் மீது பெறப்பட்ட வட்டியையும் உள்ளடக்குகிறது.

(3) **சிக்மா PLC** ஆனது **பீட்டா PLC** க்குச் சொந்தமான களஞ்சியத்தினை 2018 ஏப்ரல் 01 முதல் பாவித்து வந்ததுடன் வருடாந்த வாடகையாக ரூபா 50,000/- இனை **சிக்மா PLC** ஆனது **பீட்டா PLC** க்குச் செலுத்தியது.

(4) 2018 ஏப்ரல் 01 இல் **பீட்டா PLC** இயந்திரமொன்றினை **சிக்மா PLC** க்கு ரூபா 5,000,000/- க்கு விற்றது. அந்தத் திகதியில் **பீட்டா PLC** யின் ஏடுகளில் அந்த இயந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி ரூபா 4,000,000/-. 2018 ஏப்ரல் 01 இல் அந்த இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) சுவீகரிப்பினால் (கொள்வனவு) ஏற்படும் நன்மதிப்பினைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சிக்மா PLC** யின் ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றினைத் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) விகிதப் பகுப்பாய்வின் வரையறைகள் (limitations) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |